**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.25/2020**

**CNR.No.TNCB19000**

Date: 04.02.2026 PW2

| பெயர் | மாவழகன் | வயது | 54 |
|---|---|---|---|
| த/பெ | கோபால்சாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | வெள்ளிக்குப்பம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 4th February 2026

வா.சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு வழக்கு பற்றி என்ன தெரியும் என்றால் பிரதிவாதியின் மகன் இறந்துபோன மோகன்குமாருடன் இருந்தேன். மோகன்குமார் எவ்வளவு கடன் வாங்கினார் என்றால் 8 லட்சம் வாங்கினார். மோகன்குமார் எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் . மோகன்குமார் இறந்துபோனதால் அவரது தாயார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் மாரியம்மாளுக்கும் சம்பந்தம் இல்லையென்றால் பிரதிவாதி உடன் வந்துதான் பணம் வாங்கினார். பிரதிவாதிதான் பணம் வாங்கினார். பணம் வாங்கி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 2018 ம் ஆண்டில் வாங்கினார். அந்த சமயத்தில் மாரியம்மாளுக்கு சுமார் 80 வயது இருக்கும்.

கடனுறுதி சீட்டை நான் எழுதவில்லை . ஜெசி ஜான்சி என்பவர் எழுதினார் . மோகன் குமாரும் பிரதிவாதியும்தான் ஜெசிஜான்சியை அழைத்து வந்தார். கடனுறுதி சீட்டில் வியாபாரத்திற்காகதான் ரூ . 8 லட்சம் வாங்கியதாக எழுதப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. ஆனால் பணம் வாங்கினார். நான் வாதியிடம் சொல்லி வாங்கி கொடுத்தேன். எவ்வளவு வட்டி பேசி முடித்தேன் என்றால் அவர்களாகவே பேசி முடித்தார்கள். எவ்வளவு எனக்கு கமிசன் என்றால் அவர்களாக கொடுத்தால் வாங்கிக்கொள்வேன். பாலசுப்ரமணியம் என்பவரை தெரியும்.

பாலசுப்ரமணியம் பணம் கொடுக்கும்போது உடன் இருந்தார். பிரதிவாதி பணம் வாங்கிய இடத்தில் கைரேகை வைக்கவில்லை என்றால் சரியல்ல . கைரேகையை எங்கு வைத்தார் என்றால் வாதியின் வீட்டில் வைத்து கைரேகை வைத்தார் . வாதியின் வீட்டில் வைத்து கைரேகை வைக்கவில்லை என்றும் கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை பிரதிவாதியினுடையதல்ல என்றால் சரியல்ல . அதை ஆய்விற்குட்படுத்தினால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான் . கடனுறுதி சீட்டில் பிரதிவாதி மாரியம்மாள் கையெழுத்து போட்டாரா இல்லையா என்று ஞாபகம் இல்லை. கைரேகை வைத்தார். அந்த சமயத்தில் நான் உடன் இருந்திருந்தால் தெரியும் என்றும் நான் இல்லாததால் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

வீராசாமி மோகன்குமாரிடம் கொடுத்த கடனை வசூல் செய்வதற்காக அவரின் தாயார் சொத்தை அபகரிக்கும் நோக்கில் அவருடன் சேர்ந்து இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . பணம் வாங்கியது சம்பந்தமாக வட்டியை சரியாக கொடுத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . எனக்கு வழக்கு பற்றிய எந்த விபரமும் தெரியாது என்றும் வீராசாமியிடம் கமிசன் பணத்தை பெற்றுக் கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.